## பரிசோதனை முடிவு பிழையாயின் என்ன நடக்கும்?

- கண்டறியப்பட்ட மாற்றங்களை உறுதிப்படுத்த நீங்கள் மேலதிக பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படுவீர்கள்.
- இதற்காக வைத்திய ஆலோசனை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்படி பரிந்துரைக்கப்படுவீர்கள்.

## பரிசோதனை முடிவு சாதாரணமாயின் என்ன நடக்கும்?

- இது மிகவும் இன்பமான செய்தி.
- நீங்கள் 5 வருடங்களின் பின்னர் இப்பரிசோதனையை மீளச் செய்யும்படி பணிக்கப்படலாம்.

## இந்த பப் பரிசோதனையை நான் எங்கு செய்து கொள்ளலாம்?

- நாடு பூராக உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடாத்தப்படுகின்ற எல்லாச் சுக வனிதையர் நலக் கிளினிக்குகளில்....
- அரசாங்க வைத்திய சாலைகளில் நடைபெறும் எல்லாச் சுக வனிதையர் நலக் கிளினிக்குகள், பெண்னோயியல் கிளினிக்குகள்.
- தனியார் வைத்திய சாலை கிளினிக்குகள்.
- ஆரம்ப புற்றுநோய்க் கண்டுபிடிப்பு நிலையம், தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்., 516, எல்விட்டிகல மாவத்தை., நரகேன்பிட்டிய, கொழும்பு 05. தொலைபேசி - 0013159227.

## ஆரோக்கியமான பெண்களே!

- உங்கள் வாழ்வைப் பூரணமாக அனுபவியுங்கள்.
- ஆரோக்கியமான சுகாதாரமான பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளுங்கள்.

### ஆனால் பின்வருவனவற்றில் கவனமாயிருங்கள்...

உங்கள் தாம்பத்திய நடவடிக்கைகளை நம்பகமான ஒருவருடன் மட்டுப் படுத்திக்கொள்ளுங்கள்.

பாதுகாப்பற்ற உடலுறவு எனச் சந்தேகிக்கும் பட்சத்தில் ஆணுறைகளைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்.

**உங்களது வளமான வாழ்வை, பப் பரிசோதனை மூலம் உறுதி செய்து கொள்ளுங்கள்.**

**இச்சேவையானது எல்லாச் சுக வனிதையர்கள் கிளினிக்குகளில் இலவசமாக வழங்கப்படுகின்றது.**

**தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.**
555, பொதுச் சுகாதார கட்டடத் தொகுதி.
எல்விற்றிக்கல மாவத்தை,
நரகேன்பிட்டிய. கொழும்பு -5.
தொலைபேசி – 0112368627/0113159227
E : nccpsl@yahoo.com
W : www.health.gov.lk

Produced by: PRINTCARE

# கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தவிர்ப்பதன்மூலம் எங்கள் வாழ்வை வெற்றி கொள்வோம்!




ஆரோக்கியமான பெண்ணாக இருங்கள்!
வாழ்வை ஆனந்தமாக அனுபவியுங்கள்!!

## உங்களுக்குத் தெரியுமா?

இலங்கையிலே பெண்களைத் தாக்குகின்ற புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

மிக ஆரம்பத்திலேயே கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை கண்டறியும் பட்சத்தில் இந்நோயை முற்றாகக் குணப்படுத்தலாம்.

**கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் அறிகுறிகள் தோன்றும்வரை காத்திராது பப் பரிசோதனையை நேரத்துக்கே செய்யுங்கள்!**




## கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் எவை?

- யோனியினூடாக ஒழுங்கற்ற குருதிப் பெருக்கு.
- தாம்பத்திய உறவின்பின் யோனியினூடாகக் குருதிப் பெருக்கு.
- யோனியினூடாக குருதி கலந்த அல்லது மணமுடைய திரவப் பெருக்கு.
- மாதவிடாய்ச் சக்கரம் முற்றாக நின்றபின் குருதிப் பெருக்கு ஏற்படல்.

## கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளவர்கள் யார்?

- ஹியுமன் பப்பிலோமா வைரஸ் (HPV) தொற்றுடையவர்கள்.
  - 95 வீதமான கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது HPV உடன் தொடர்புடையது.
  - உங்களுடைய பாலியல், தாம்பத்திய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் HPV வக்சீன் தடுப்பூசியை ஏற்றுவது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படாமல் பாதுகாக்கும்.
  - HPV வக்சீன் தடுப்பூசியானது தற்போது தனியார் வைத்தியசாலைகளில் மட்டும் கிடைக்கின்றது.
- மிக இளவயதில் பாலியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தவர்கள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் இணைகளைப் பெற்றவர்கள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் இணைகளை கொண்டவர்களை பாலியல் இணையாகப் பெற்றவர்கள்.
- தான் புகைப்பவராகவோ அல்லது அதிகளவில் புகைப்பவர்களுக்கு அருகிலிருப்பவர்கள்.
- சில நோய்களுக்காக, நோய் எதிர்ப்புச் சக்தியை குறைக்கும் மருந்து வகைகளை உள்ளெடுப்பவர்கள்.
- கடந்த காலங்களில் பாலியல் ரீதியாக தொற்றுநோய் வரலாறு கொண்டவர்கள்.

## கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கக் கூடியதா?

“ மற்றைய புற்றுநோய்களைப் போலல்லாது கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது தடுக்கப்படக் கூடியது. கருப்பைக் கழுத்துப் புற்றுநோயானது மிக மெதுவாகவே புற்றுநோயாகப் பரிணமிக்கின்றது. புற்றுநோயாகப் பரிணமிப்பதற்கு முன்பாக இந்நோயைக் கண்டறிய முடியுமாயின் முழுமையான கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாக உள்நோக்கிப் பரவி உருவெடுப்பதை முற்றாகத் தவிர்க்கலாம். ”

## எதிர் காலத்தில் உங்களுக்கு கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் ஏற்படக்கூடிய ஆபத்துக் காரணியைக் கொண்டவரா என்பதை இவ்வாறு தெரிந்து கொள்ளலாமா?

**ஆம், இதைத் தெரிந்து கொள்ளலாம்,**

**“பப்” பரிசோதனை மூலம்.**

- Pap Smear Test-பப் பரிசோதனை என்பது கருப்பைக் கழுத்தில் செய்யப்படுவது.
- மாதவிடாய்ப் பெருக்கு அல்லாத சாதாரண ஒரு நாளில் இப்பரிசோதனைக்காக வருகை தாருங்கள்.
- இது உங்களை உறுத்தாது.
- கருப்பைக் கழுத்துப் புற்றுநோயாக உருவெடுக்கக்கூடிய மிக மிக ஆரம்ப நிலையிலுள்ள கருப்பைக் கழுத்து இழைய மாற்றங்களைக் கண்டறிய முடியும்.

## யார் இந்த பப் பரிசோதனைக்கு அதிகமாகப் பரிந்துரை செய்யப்படுகின்றார்கள்?

- பப் பரிசோதனையானது ஆரோக்கியமாக வாழும் பெண்களுக்குரிய பரிசோதனையாகும்.
- முதலாவது பாலியல் தாம்பத்திய நடவடிக்கைகளை ஆரம்பித்து 5 வருடங்களின்பின் எல்லாப் பெண்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகின்றது.
- 35 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பெண்களும் சுக வனிதையர் நலக் கிளினிக்குகளில் இப் பரிசோதனையைச் செய்து கொள்ளலாம்.

